தரத்தில் சிறந்த
முயல், வரிக்குதிரை
மான், விளக்கு,
செவன மார்க்
ஓடுகளுக்கு

மு. தா. பொன்னம்பலம்,
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

the EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice, Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 6 றம்ழான் 28 இதழ் 191
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22-8-79

கேட்கத்தவறுதீர்கள்
"அகாபே போர்ஸிகள்"
"மை பிறதர்ஸ் கீப்பர்
MY BROTHER'S KEEPER
இன்னிசை விருந்து
வீரசிங்கம் மண்டபம்
25-8-79 சனிக்கிழமை
மாலை 6-00 மணி,
பிரவேசம் இலவசம்
அனைவரும் திரண்டு வருக
3365

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1979-8-22
PERIODICALS DIVISION

# தேர்தலா? ஜெகஜீவன்ராமா?

# ராஷ்டிரபதி இன்று அறிவிப்பார்!

## கட்சித் தலைவர்களுடன் 2 நாள் மந்திராலோசனை

(புதுடில்லி)

**இடைத்தேர்தலை நடத்துவதா அல்லது அரசாங்கம் அமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன் ராமை அழைப்பதா என்பது குறித்து நேற்று இரவு வரை பாரதராஷ்டிரபதி முடிவு எதுவும் எடுக்காத போதிலும், தமதுஇறுதியான தீர்மானத்தை இன்று புதன்கிழமை அவர் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

நேற்று ராஷ்டிரபதியைச் சந்தித்து முப்பது நிமிடநேரம் ஆலோசனை நடத்திய ஜனதா கட்சித் தலைவர் திரு சந்திரசேகரர், "மற்றவர்களின் உதவியுடன் உறுதியான் அரசாங்கத்தை அமைக்க ஜனதா கட்சியினால் முடியும் என்றும், ஆட்சி அமைக்குமாறு திரு. ஜெகஜீவன்ராமுக்கு அழைப்பு விடுக்குமாறும்" கோரிக்கை விடுத்துள்ளார். இடைத் தேர்தலை நடத்தாமல், திரு. ஜெகஜீவன்ராமுக்கு அரசு அமைக்கும் உரிமை வழங்குமாறு எம். பிக்கள் பலர் பாரத ராஷ்டிரபதிக்கு தந்திமூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ராஷ்டிரபதி மந்திராலோசனை

நேற்று முன்தினம் ராஜினாமா செய்த "இந்தியாவின் 24-நாள் ஆட்சிப்" பிரதமர் திரு. நீலன் சஞ்சீவரெட்டிக்குத் தெரிவித்திருந்த யோசனைமீது ராஷ்டிரபதி கட்சித்தலைவர்களுடனும், சட்ட நிபுணர்களுடனும் கடுமையாக தொடர்ச்சியாக மந்திராலோசனை நடத்திவருகின்றார். திரு சரண்சிங் தமது அமைச்சரவையின் ராஜினாமாவை ராஷ்டிரபதியிடம் சமர்ப்பித்தபோது; லோகசபையை உடனடியாகக் கலைத்து, இடைத்தேர்தலை நடத்த உத்தரவிடுமாறு திரு சரண்சிங் ஆலோசனை கூறியிருந்தார். இதனைத் தொடர்ந்து திரு நீலன்சஞ்சீவரெட்டி நேற்றுமுன்தினம் முதல் பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களுடனும் அரசியல் சாசன நிபுணர்களுடனும் தொடர்ச்சியாக ஆலோசனை நடத்திவருகின்றார்.

### ஸ்டீபன் மீண்டும் சந்திப்பு

ராஷ்டிரபதியின் விசேட அழைப்பின்மீது நேற்று இரண்டாவது தடவையாக, இந்திரா காங்கிரஸ் (பாராளுமன்றக்குழுத்) தலைவர் திரு ஸ்டீபன் இன்று மீண்டும் ராஷ்டிரபதியைச் சந்தித்து சுமார் முப்பது நிமிடநேரம் ஆலோசனை நடத்தினார். இப்பேச்சுக்களை பற்றி திரு. ஸ்டீபன் நேற்று கருத்து எதுவும் வெளியிடாதபோதிலும், "இடைக்காலத் தேர்தல் பற்றி ஆலோசிக்கப்பட்டது" என்று மட்டும் கூறினார். இதனைத் தொடர்ந்து பத்திரிகை நிருபர்களுக்கு திரு. ஸ்டீபன் நேற்றுமாலை அளித்தபேட்டியில்; "நாளைக்குள் (புதன்கிழமை) எமது நிலை தெளிவாகிவிடும்" என்று நம்பிக்கை தெரிவித்தார். ஒரு கட்டத்தில் அவர்; "சரண்சிங் அரசு எம்மை நாடவில்லை என்றும் எமது ஒத்துழைப்பைக் கோரவில்லை என்றும் திரு ராஜ்நாராயண் கூறுவது பச்சைப்பொய். அவர்கள் எமது ஆதரவைக்கோரியது எழுத்து மூலம் உள்ளது" என்று கூறினார்.

### இந்திரா; ராம்; ஷேக் சந்திப்பு

பாரத ராஷ்டிரபதியை திருமதி இந்திராகாந்தி நேற்றுச் சந்தித்து அரைமணி நேரம் ஆலோசனை நடத்தினார். ஆனாலும் இச்சந்திப்பு பற்றிகருத்து வெளியிட திருமதிஇந்திரா காந்தி மறுத்துவிட்டார். இதன் பின்னர் ஜம்முகாஷ்மீர் முதல்வர்ஜனாப் ஷேக் முகம்மது அப்துல்லா பாரத ராஷ்டிரபதியைச் சந்தித்து சில மணிநேரம் வரை தற்போதைய அரசியல் நிலைமை பற்றி ஆலோசனை நடத்தினார். இவர்கள் தவிர ஆந்திர பிரதேச முதல்வர் திரு ஷென்னரெட்டி, ஜனதா கட்சித்தலைவர் திரு சந்திரசேகர், ஜனதா-எஸ் கட்சித்தலைவர் திரு ராஜ்நாராயண், அ இ அ தி மு க பாராளுமன்றக் குழுத்தலைவர் திரு. பாலா பழனூர் ஆகியோரும் திரு நீலன் சஞ்சீவரெட்டியைச் சந்தித்து, அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைக்கும் வழிவகைகள் பற்றி ஆலோசனை நடத்தினர். லோகசபை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஜெகஜீவன்ராமும் திரு. ரெட்டியைச் சந்தித்துப்பேச்சுக்கள் நடத்தினர்.

### கட்சித்தலைவர்கள் ஆலோசனை

கட்சித்தலைவர்களை ராஷ்டிரபதி சந்திக்கும் அதேநேரத்தில்; பல்வேறு கட்சிகளின் தலைவர்க

6-ம் பக்கம் பார்க்க

## வேலைகோரி 15,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமியிடம் வேலைகோரி இதுவரை சுமார் 15,000 பேர் விண்ணப்பித்துள்ளதாக தெரியவருகிறது.

வேலைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு ஒவ்வொரு வாரமும், திங்கள், புதன் கிழமைகளில் அரசாங்க செயலகத்தில் நான்கு இடத்தில் நேர்முகப்பரீட்சை நடைபெற்றுவருகிறது.

பதில் அரசாங்க அதிபர் திரு. ஜெகநாதன், திட்டமிடல் அதிபர் திரு. லோகேஸ்வரன், உதவி கே. பஞ்சலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். தர்மபாலன் ஆகியோர் நேர்முகப்பரீட்சை நடத்தி வருகின்றனர்.

விண்ணப்பதாரர்கள் நேரில் சென்று தாங்கள் விரும்பும் தொழில் மற்றும் விபரங்களை தெரிவித்துவருகின்றனர்.

இவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டபின் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

தினமும், வேலைக்கான விண்ணப்பங்கள் நூற்றுக் கணக்கில் பதிவுத்தபால் மூலமும் யாழ். மாவட்ட செயலாளருக்கு அனுப்பப்பட்டுவருகிறது. கடிதமூலம்வரும் விண்ணப்பங்களும், பதிவுசெய்யப்பட்டு, பரிசீலனைக்குபின் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. [ஏ]

யபழ். தொகுதி

## 10 வீடுகளிலும் சமய ஆசாரப்படி குடியேறினர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத் தொகுதியில் கட்டப்பட்ட 10 வீடுகளும், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

வீடுகளைப் பெற்றவர்கள், சமயாசாரப்படி, இருக்கப்பிரவேசம் செய்து குடியேறினர்.

யாழ்ப்பாணத் தொகுதியில் மேலும் 20 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. [உ-அ]

## பகிஷ்கரிப்பு: இன்று இறுதிமுடிவு

[கொழும்பு]

பாராளுமன்றம் செல்வதா; இல்லையா என்பது பற்றி இறுதி முடிவெடுப்பதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்றக்குழு இன்று காலை கொழும்பில் கூடுகிறது.

கடந்தமாதம் 3ந்திகதிமுதல் தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி. க்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே. [ம]

## செல்வச்சந்நிதி முருகன் கோவில் நிர்வாகம் வேண்டுகோள்!

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் சார்பாக எந்தத்தனி நபர்களோ அன்றி மன்றங்களோ ஆலயத்துடன் தொடர்புள்ளவர்களோ பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டுவதற்கு அல்லது பண்டங்கள் சேகரிப்பதற்கு நிர்வாகம் அனுமதிக்கவில்லை. நன்கொடைகள் அல்லது தர்மப்பணிகள் வழங்க விரும்புவோர் ஆலய நிர்வாகிகளுடன் தொடர்புகொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

ஆலயம் சார்பாக நிதியோ பொருளோ திரட்ட வேண்டிய அவசியமில்லை.

ஆலய கொடியேற்றம்

இன்று 22-8-79 இரவு 11-01மணி.

உலககுருநாதஐய
(ஆலய நிர்வாகி)

3366

# பழம் பெரும்தலம் சந்நிதி இன்று கொடியேற்றம்

கலியுக வரதன் கந்தன் என்பது அறிஞர்கள் பெருங் கருத்து. நம்பினர் கெடுவதில்லை என்பது நான்கு வேதங்களின் முடிபு. ஆனைமுகன் தம்பி ஆறுமுகன் தன்னை நம்பித் தஞ்சம் அடைந்தவர்களுக்கு அருளுவதில் இணையில்லா தலைவன் என்பது ஆஸ்திகர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. பாடல் பெற்ற தலம் கதிர்காமம். பசி தீர்த்துப் பக்தர் பிணி தீர்க்கும் பழம்பெரும் தலம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி- இது மக்கள் மனம் நிறைந்த ஆலயம். மூர்த்தி விசேடமுள்ளது, தலச்சிறப்புள்ளது. தீர்த்த மகிமை கொண்டது.

ஆவணி மாதப் பூரணைதினம் சந்நிதிப் பெருமான் தீர்த்தம் ஆடி அடியார்களுக்கு அருள் புரியும் திருநாள் அரோகரா ஒலி வானுயரக் கொட்டும் நாள் இன்று புதன்கிழமை இரவு 11 மணிக்குமேல் கொடியேற்ற வைபவம் இடம்பெறுகிறது. அழகன் பவனிவர, வீதி உலாவர, பொன்னார் மேனியைக் கண்ணில் ஒற்றி, ஊன் உருக, உடல் உருக, உள்ளம் உருக முருகா என நா ஒலிக்க, கண்கள் பனிக்க, கருணைவள்ளலுக்காக ஏங்கும் உள்ளங்கள் இலட்சோப லட்சம்.

முதுபெரும் பக்தரும், தொண்டரும், குருக்களுமான திரு. பொன்னுச்சாமி ஐயர் செல்வநாயகம் ஐயர் அவர்கள் பிரதம குருக்களாக இருந்து இவ்வாண்டு விழாவை நடாத்துகின்றார்கள். எல்லாரும் வாழ முருகனை வேண்டி அர்ச்சிக்கிறார்கள். தீபம் காட்டித் துன்பம் போக்குகிறார்கள்.

அழுவார், தொழுவார், அரோகரா என்றிடுவார், வேல்பாய்ச்சி உடல் கிழித்து வேலனை வேண்டிடுவார், முள் மிதித்து வினைதீர்க்க முருகனை இரந்திரந்தழுவார், காவடி யாடி யாடிக் கடன் தீர்ப்பார், உடல் உருண்டு உருண்டு கர்ம வினை தீர்ப்பார், தீதகலத் தீ மிதிப்பார், கற்பூரதீபம் எரித்துக் கருத்தைத் தெளிவார், பாடுவார், பரவுவார், பக்கலை காட்டுவார், பல் இசையூட்டுவார் இவையெல்லாம் இரவு பகலாகக் காணும் காட்சியாம். இது உலகா- உருகாமனமும் உருக- முருகா என்னும் சொல் பெருக- ஒரு திருமுருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய



என்ன வருகின்றான். தீராத நோயெல்லாம் தீர்த்துவைக்கும் வைத்தியநாத பாலனை...

பாலசுந்தரனே என்று பயமுறுத்த மலையான சூரனை யாரும் நினைக்க-கூவும் சேவலாகவும் ஏறும் மயிலாகவும் கொண்ட சூரசம்காரனை-

தந்தைக்கு பிரணவம் உபதேசித்த ஞானசற்குருவை, சுப்பிரமணியனை...... நினைப்போம்.

மு. சு, கதிர்காமத்தம்பி

## மக்கள் கருத்து

### படகுகளை நாம் நன்கொடையாகப் பெறவில்லை

புங்குடுதீவு பல நோ. கூ. சங்கம் நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தனது படகுகளில் ஒன்றை நன்கொடையாக வழங்கியதாக நிலவிய செய்தி முற்றிலும் தவறானதாகும். புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்திடம் இருந்து நாங்கள் பொறுப்பேற்ற படகு நெடுந்தீவு பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கத்தால் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதுடன் அதற்குரிய இயந்திரத்தையும் இறக்குமதிசெய்வதற்கு எமது சங்கமே நடவடிக்கை எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. முன்னைய நிருவாகத்தின் சீர்குலைவினால் சங்கம் செயலிழந்ததும் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம் மேற்படி படகை தனது பாவனைக்காகப் பயன்படுத்திவந்தது. நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம் மீண்டும் புனரமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கியதும் நெடுந்தீவு மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான நெடுந்தீவுக்குத் தனியான ப. நோ. கூ. சங்கம் நிறுவப்படுதல் என்னும் கொள்கையை புனரமைக்கப்பட்ட பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 22-4-79ல் அது நிறைவேற்றப்பட்டது.

பின்னர் எமது படகை மீண்டும் கையேற்பது தொடர்பாக நாம் தீர்மானித்து ரூபா 75 ஆயிரத்துக்கு மதிப்பிட்டிருந்தபோதும் புங்குடுதீவு நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக புதிய தலைவருக்கு மீண்டும் எமது நிலைப்பாட்டை தெரிவித்து படகை எம்மிடம் கையளிக்குமாறு கேட்டிருந்தோம். இதற்கமைய கடந்த 4-8-79ல் எமது செயற்குழுவும் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் இயக்குநர் சபையும் ஒன்று கூடி சில முடிவுகளை மேற்கொண்டபின்னர் படகை நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்டோம். சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு விகிதாசார அடிப்படையில் பங்கீடு செய்யப்படும்போது படகிற்கு மதிக்கப்பட்ட தொகையும் அதில் அடங்கும். இந்நிலையில் படகை எமக்கு நன்கொடையாக வழங்கியது என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றதும் ஆதாரமற்றதுமான ஒன்று என்பது புலனாகின்றது. எம்மால் கட்டப்பட்ட படகு மீண்டும் எமக்கு விற்பனை செய்யப்படுகின்றதே தவிர நன்கொடையாகவல்ல என்பதை மேற்படி படகை எமது சங்கத்தின் சார்பில் கையேற்றுக்கொண்டவன் என்ற வகையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நா. இலட்சுமணராசா,
பிரதித் தலைவர்,
நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம்.

## அப்பனே நல்லூர்க் கந்தா வணங்கிட அருளைத் தாதா

மயிலி லேறி வருமுருகா
மனத்தின் துயரைக் களைந்தோட்டி
பயிலும் சீரார் படிவாழ்க்கை
பணியாய்ப் பாட வருளீந்து
துயிலும் போதும் எழும்போதும்
தொழிலே செய்யு மதுபோதும்
அயிலைக் கைக்கொள் அதிதீரா
ஆழ்வாய் நல்லூர்ப் பெருமானே.

அழகு வதனம் ஓராறும்
அன்பு விழிக ளீராறும்
மழலை தவழும் திருமேனி
மாரிபிற கடப்ப மலர்மாலை
பழகு மினிய புன்முறுவல்
பக்கம் வள்ளி தெய்வானை
உழவன் கரத்து வேல்கொண்ட
ஒருவா நல்லூர்ப் பெருமானே.

கந்தனென் றுலகம் போற்றக்
கண்ணுத லாளன் தந்த
எந்தையே முருக வேளே
ஏற்றிடும் மயிலின் வாகா
வந்தனை செய்ய நாளும்
வழிபடு கடவு ளான
தந்தி யானனின் தம்பி
தலைவநல் லூரா போற்றி.

அருட்கவிமணி
வே. செல்வநாயகம்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## சரவணையில்

### மகா கும்பாபிஷேகம்

(சரவணை)

சரவணை-தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 29ந் திகதி காலை 6 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமிக்கும் ஸ்ரீ விநாயகர், வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி, வைரவப் பெருமான் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்று இரவு திருக்கல்யாணமும் உற்சவமும் நடைபெறும்.

பொதுமக்களின் உதவியுடன் ஆலய பரிபாலன சபையால் நடத்தப்பெறும் இம்மகா கும்பாபிஷேகத்தில் பன்னிரண்டு குருக்கள் பங்கு பற்றுகிருர்கள். சிவஸ்ரீ சோமாஸ்கந்த சிவாச்சாரியார் பிரதிஷ்டா பிரதம குருக்களாகக் கடமையாற்றுவார். தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள் மகாகும்பிஷேகத்திற்கான ஒழுங்குகளை கவனித்துவருகிறார். நல்லை ஆதீன ஓதுவார் மூர்த்தி திரு. வி. ரி. யு. சுப்பிரமணியம் திருமுறைப் பாராயணமும் இடம்பெறும். மகா கும்பாபிஷேகத்தையொட்டி அன்னதானமும் நடைபெறவுள்ளது.

# சிங்கராசியில் குருபகவான் இன்று பிரவேசிக்கிருர்

## உங்கள் பலன் எப்படி?

ஸ்ரீ சித்தார்த்தி நாம வருஷம் ஆவணிமாதம் 6ம் திகதி 22-8-79 புதன்கிழமை, பின்னிரவு 1-07 நிமிடத்துக்கு குருபகவான் சிங்க இராசிக்குள் பிரவேசிக்கின்ருர். இவற்றைவிட, இம்மாத இறுதியில், ஆறு கிரகங்கள் சிங்க ராசியில் கூடுவதும், நவம்பர் மாதம் சனி மாறுவதும் ஒவ்வோர் வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்தும். இப் பெயர்ச்சியினால் ஏற்படும் பலாபலன்கள் இராசி வாரியாக கீழே தரப்படுகின்றன.

### மேட இராசியில் பிறந்தவர்கள்...

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் கால்)

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு குருமாற்றம் நல்ல பலனைக் கொடுக்கும். எனினும், இவ்வாண்டு இறுதிவரை முன்னேற்றங்கள் தடையாக இருந்தாலும், புதிய ஆண்டு மகிழ்ச்சிக்குரியது. தொழில்துறைகளில் அபரிதமான முன்னேற்றம், கல்வியால் சித்தி, குடும்ப மகிழ்ச்சி, இனசன உறவு திருமணமாகாதவர்களுக்கு திருமணம் நடைபெறல். தடையான வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடுதல், தொழில்துறைகளில் போட்டியின்மை வீடு, வாகனம் வாங்குவதற்கான பலனுமுண்டு. திசாபுத்திகள் நன்ருக இருக்குமாயின் நினைத்தவை கைகூடும்.

### இடப இராசியில் பிறந்தவர்கள்...

(கார்த்திகை 2, 3, 4ம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1ம், 2ம் கால்கள்)

இவர்களுக்கு வியாழமாற்றம் அதிக பலனைத் தராவிட்டாலும், மனநிம்மதியைக் கொடுக்கும். தீராத பல பிரச்சினைகள் மிகுந்த சிரமத்தின் மத்தியில், கைகூடும். தொழில்துறைகளில் வரவு குறைவு. அதிகசெலவு, இனசன விரோதம் அாலயோகம் எவ்வளவு புத்திமாக நடந்துகொண்டாலும், அச்சலும் உபத்திரவமும் தானாக தேடிவரும். மனைவி கணவர் உறவு திருப்திகரமாக இருக்காது. நோய் உபத்திரவம் அடிக்கடி உருவாகும்.

### மிதுனராசியில் பிறந்தவர்கள்...

(மிருகசீரிடம் 3ம் 4ம் கால்கள் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் கால்கள்)

கிடைக்கக்கூடிய உதவிகள் சிரமத்தின் மீது தடைப்படும். அதிக பிரயாசையினால் பணலாபமுண்டு இனத்தவர்கள் வீண் தொல்லைகளை ஏற்படுத்துவர். தெய்வதரிசனத்துக்காக நாடு விட்டு அலைதல், எதிலும் வெறுப்பு, மன அமைதியின்மை. சொத்துக்களைப் பெறுவதில் வீண்பகை, எண்ணிய காரியங்களில் மன அமைதியைப் பாதிக்குமளவையில் பொருட்செலவும் கைகூடாமலும் இருக்கும்.

### கர்க்கடக இராசியில் பிறந்தவர்கள்...

(புனர்பூசம் 4ம் கால், பூசம், ஆயிலியம்)

கடந்தாண்டுகளில் பல இன்னல்களை அனுபவித்து வந்த இந்த ராசிக்காரர்கள் இனிமேல் ஓரளவு நல்ல பலாபலன்களைப் பெறுவர். தொழில்துறையில் ஊதிய உயர்வு, நன்மதிப்பு, பதவி உயர்வுகளும், திருமணமாகாதவர்க்கு திருமணப் பேச்சுக்கள் நிகழும். மனைவியின் நோய் குணமாகுதல், பொருளாலபம், இனசன நன்மை, குடும்பசுகம், மனநிம்மதி ஆகியவை காட்டும்.

### சிங்க ராசியில் பிறந்தவர்கள்...

(மகம், பூரம், உத்தரம் 1ம் கால்)

இந்த ராசிக்காரர்களுக்கு பலவகையிலும், பிறரால் தூற்றப்படுதலும், வீண் தன் பங்களும், மன அமைதியின்மை பொருளழிவு காணும். புத்திரர், களத்திரம், இனசனத்திடையே வீண்பகை உருவாகும். எதிரிகளை திட்டமிட்டு இயங்குவர், தொழிலில் இராஜவிரோதம், கடன் தொல்லை, ஏமாற்றப்படுதல் காணும். அரசியல் விவகாரங்களில் அதிருப்தி ஏற்படும்.

### கன்னி ராசியில் பிறந்தவர்கள்...

(உத்தரம் 2, 3, 4ம் கால்கள், அத்தம், சித்திரை 1ம், 2ம் கால்கள்)

சென்ற ஆண்டுகளைப்போல குருமாற்றமும் அதிக பலனளிக்காது. வாழ்க்கையில் விரக்தி, அச்சம் மனநிம்மதியின்மை, பொருட்செலவு குடும்பப்பகை, இளைய சகோதரங்களிடையே மனக்கசப்பு, செய்தொழிலில் வருவாய்க் குறைவு பிள்ளைகளால் கவலையுண்டு, காதலரிடையே கருத்து வேற்றுமை, உயர்அதிகாரிகளிடம் பகைதோன்றும்.

### துலாம் ராசியில் பிறந்தவர்கள்...

(சித்திரை 3ம் 4ம் கால்கள் சுவாதி, விசாகம் 1, 2, 3ம் கால்கள்)

போதிய வருமானங்கள் கிடைப்பினும் செலவு அதிகமாகும், வீட்டில் சுபமங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும், காரியங்கள் அனுகூலமுண்டு, நண்பர்கள், இனசனத்தவரால் நன்மையுண்டு, சொத்து விடயங்களில் அதிக கவனம் தேவை, பகைவரினும், விலக்

(4ம் பக்கம் பார்க்க)

# ' கோரிக்கைகளைப் பரிசீலனைசெய்து நியாயமானவற்றை நிறைவேற்றுவேன்''

--யோகேந்திரா துரைசுவாமி

(யாழ்ப்பாணம்)

"நீங்கள் இன்று சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளைப் பரிசீலனைசெய்து, நியாயமானதாகக் கருதப்படும் கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்றி வைப்பேன்."

இவ்வாறு யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியைச் சந்தித்த காங்கேசன்துறை-நாம்பொன்-தாரந்தனை அபிவிருத்திச் சபையின் தூதுக்குழுவிடம் அவர் உறுதியளித்தார்.

இத்தூதுக் குழுவில் திரு. எப். எம். சேபஸ்ரியான் தலைமையில் நிர்வாகிகள் சு. கதிர்த்தம்பி, ச, ம அல்விரம், பி. இம்மானுவல், எம். அருமைநாதன், பி. மனுவல் பிள்ளை, மு. கெங்கேஸ்வரன், வெ. பாலசிங்கம், கே. செபமாலை ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

தூதுக்குழுவினர் சமர்ப்பித்த மகஜரில் கூறப்பட்ட கோரிக்கைகள் வருமாறு!

காங்கேசன்துறைப் பட்டின சபையின் இரண்டாவது நீர் விநியோகத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற உதவுதல். இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கச் செயலகங்கள் அனைத்தும் காங்கேசன்துறையில் வாடகைக் கட்டிடங்களில் இயங்குவதால் புதிய இடத்தில் அரச செயலகம் ஒன்றை அமைத்து இயங்க வைத்தல்.

காங்கேசன்துறையில் பொலிஸ்நிலையக் கட்டடத்தை அமைக்க உதவுதல்; இதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஆஸ்பத்திரியில் திருத்தவேலைகளை மேற்கொள்ளல் காது, கண், வாய், மூக்கு வைத்திய நிபுணர் இச்சைசதியைய பிரிவுகளை உடன் நிறுவுதல்.

மக்கள் வங்கிக் கட்டிடம் ஒன்றை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளல். இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுக் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைத் தொகுதியில் மாதிரிக்கிராமம் ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுத்தல் மிக வேகமாகக் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றப்படுவதால் இதனை உதவி அரசாங்க அதிபரைக்கொண்டு தடைசெய்து மேச்சல் தரைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தல்.

வாடிவீட்டை நவீனமயப்படுத்தி அபிவிருத்திசெய்தல். (செ)

## "சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றத்திற்கு உழைத்தவர்"

(அரியாலை)

"தொழிலாளி, விவசாயிகளின் போராட்டங்களில் பங்கெடுத்த போராளியும், முதுபெரும் அரசியல்வாதியும் சிறந்த சோஷலிஸவாதியுமான கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு இந்நாட்டின் தொழிலாளி-விவசாயி வர்க்கத்திற்கும், இந்நாட்டுக்கும் பேரிழப்பாகும்."

இவ்வாறு டாக்டர் என். எம். மின் மறைவுகுறித்து இலங்கைத் திருவள்ளுவர் மகா சபையின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தமது வாழ்நாள் முழுவதையும் தொழிலாளி-விவசாயி நலனுக்காகவும் சமுதாய அமைப்பைக் கட்டி எழுப்புவதற்காகவும் தம்மையே அர்ப்பணித்து உழைத்துள்ளார். வடபகுதியில் வாழும் சிறுபான்மைமக்களின் முன்னேற்றம் கருதிப் பல எதிர்ப்புக்களின் மத்தியில் அழலுக்குக் கொண்டுவந்த கூட்டுறவுத் தவறணை முறையினால் சிறுபான்மைத் தமிழர் அடைந்துள்ள நன்மைகள் மிக அதிகமாகும். (அ)

## "உரிமைக்குரல் எழுப்பியவர்"

(யாழ்ப்பாணம்)

ஏகாதிபத்திய எதிர்ப்புப் பெரும் தலைவர். சோஷலிச சுதந்திரப் போராட்ட வீரராக, ஏழைத் தொழிலாள விவசாய மக்களுக்காகத் தனது வாழ்நாள முழுவதும் பாடுபட்டுழைத்தவர். தமிழ் பேசும் மக்களுக்காக உரிமைக் குரல் எழுப்பியவர் கலாநிதி என் எம் பெரேரா" என்று மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூகநிலையத்தினர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளனர். (கோ)

## இன்று
### சந்நிதி உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இன்று புதன்கிழமை அமாவாசை கழித்துவரும் சுபவேளையான இரவு 11-01 மணிக்குக் கொடியேற்றம் நடைபெறும். உற்சவம் அடுத்த மாதம் 7ம் திகதி வியாழக்கிழமையுடன் நிறைவு பெறும்.

அடுத்த மாதம் 5ம் திகதி புதன்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 6ம் திகதி வியாழக்கிழமை காலைதீர்த்த உற்சவமும் இரவு மௌனத்திருவிழாவும் நடைபெறும்.

முதலாம் திருவிழா தொடக்கம் 9ம் திருவிழாவரை இரவு 8 மணிக்கும், பூங்காவனத்தன்று இரவு 12 மணிக்கும், மற்றும் 11, 12, 13ம் திருவிழாக்கள் இரவு 8 மணிக்குச் சப்பரத்திருவிழாவரை இரவு 2 மணிக்கும் முடிவடையும்.

இம் மாதம் 31ந் திகதி தொடக்கம் உற்சவம் முடிவடையும்வரை விசேஷ பஸ் சேவைகள் நடைபெறும். (கோ-அ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ செந்திக்கதிர் வேலாயுதசுவாமி கோயிலில் இன்று 38வது நாள் மண்டலாபிஷேகம் காலை 9 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 5-30 மணிக்கு சாயங்காலப் பூசையும், அதனைத் தொடர்ந்து 'ஆனந்தம்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரையாற்றுவார். 6-30 மணிக்கு வசந்த மண்டபம் பூசையும், வீதியுலா வருதலும் நடைபெறும். (கோ)

---

## திருமண அழைப்பு

| மணமகன் | மணமகள் |
| --- | --- |
| திரு. ச. விநாயகமூர்த்தி | செல்வி இ. செல்வராணி |
| (ஆங்கிலத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) | |

தினம்: வெள்ளிக்கிழமை (24-8-79)

நேரம்: இரவு 7-15 தொடக்கம் 9-15 வரை

இடம்- மணமகள் இல்லம், கரவெட்டி

வரவேற்பு உபசாரம்: மணமகன் இல்லத்தில் (வர்த்தலைவிளான்)

சனிக்கிழமை (25-8-79) மாலை 5 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை.

நண்பர்கள் உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

| திருமதி | திருமதி |
| --- | --- |
| செ. சபாரத்தினம் | வ. கிருஷ்ணபிள்ளை |
| வர்த்தலைவிளான், | 'கிருஷ்ண வாசா' |
| தெல்லிப்பளை. | விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, |
| 3350 | கரவெட்டி மேற்கு, கரவெட்டி. |

---

நவீன சந்தை

# புதிய கட்டடம் 24-ல் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் புதிய கட்டடத்தை யாழ்நகர முதல்வர் திரு. ஆர். விசுவநாதன் இம்மாதம் 24ந் தேதி மாலை திறந்து வைப்பார்.

சுமார் 18 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட நவீன மார்க்கட் 2ம் பகுதிக் கடைகள் ரெண்டருக்குக் கொடுத்ததன் மூலம் மாநகரசபைக்குச் சுமார் 24 லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

இப்பகுதியில் 24 பெரிய கடைகள் உட்பட 44 சுகடைகள் கட்டப்பட்டுள்ளது: பெரிய கடையொன்றின் கூடிய ரெண்டர் தொகை சுமார் ஒரு லட்சமாகும்.

மேல் மாடியில் இரண்டு பெரிய மண்டபங்களும் ஒரு நடுத்தர மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. கூரை வேலைகள் பூர்த்தியாகாததால் மேற்பகுதி மண்டபங்கள் கொடுக்கப்படவில்லை.

பழைய கடைக்காரர் பதினொருபேர் தங்களுக்குக் கடைகள் வேண்டுமென்று கோரிக்கை விடுத்தபோதிலும் ஒருவர் மட்டுமே கடையைப் பெற்றிருக்கிறார். (அ)

உணவு முத்திரை:

## தகுதிபெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

உணவு முத்திரைகளைப் பெறுவதற்குத் தகுதிபெற்றவர்களின் பட்டியல்கள் அவ்வப் பகுதிக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் அங்கீகாரம் பெற்ற தனியார் வர்த்தக நிலையங்களிலும் இம்மாதம் 26ந் திகதி உதவி அரசாங்க அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு பார்வைக்கு அனுப்பி வைக்கப்படும்.

உணவு முத்திரை வழங்கும் வேலைகள் சகல உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் மேலதிக ஊழியர்களால் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. விண்ணப்பங்கள் அனைத்தும் இம்மாதம் 25ந் திகதிக்கு முன்னர் பரிசீலனைசெய்யப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டுச் அவ்வப் பகுதிக் கூட்டுறவுச் சங்கக் கிளை, தனியார்துறை விற்பனவு முகாமையாளரிடம் வழங்கப்படும்.

புதிய உணவு முத்திரை, பங்கீட்டுப் புத்தகங்களைப் போல பச்சை மஞ்சள் நிறங்களைக் கொண்டிருக்கும்: பங்கீட்டுப் புத்தகங்களை இழந்து தற்போது குறைந்த வருமானத்தில் உள்ளவர்கள் என்று உறுதிப்படுத்தி உணவு முத்திரைக்கு விண்ணப்பித்தவர்களுக்குச் செப்டம்பர் முதல் வாரத்தில் உணவு முத்திரை வழங்கப்படலாமெனத் தெரிகிறது. (செ)

## சுகம் பெறுகிறார்

(கொழும்பு)

இருதய நோயால் பாதிக்கப்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் பூரணசுகம் பெற்று இன்னும் சில தினங்களில் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறுவார் என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. வி. என் நவரத்தினம் கடந்தவியாழக்கிழமை, அமரர் என் எம். பெரேராவுக்கு அஞ்சலி செலுத்தச்சென்றபோதே இருதய நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ம)

## தேர்தலா? ஜெகஜீவன்ராமா?

1-ம் பக்கத் தொடர்ச்சி

ளும் தமக்கிடையே ஆலோசனை நடத்திவருகின்றனர். திருமதி இந்திராகாந்தி ராஷ்டிரபதியைச் சந்தித்ததன் பின்னர் இந்திராகாங்கிரஸ் பாராளுமன்றக்குழுத் தலைவர் திரு. ஸ்டீபன் திரு. ஜெகஜீவன்ராமைச் சந்தித்தார். அதே நேரத்தில் ஜம்மு காஷ்மீர் முதல்வரை திருமதி இந்திராகாந்தி சந்தித்து ஆலோசனை நடத்தினர். இதன்பின்னர் ஜனுப் ஷேக் முகம்மது அப்துல்லா, திரு ஜெகஜீவன்ராமைச்சந்தித்து சுமார் அரை மணி நேரம் மந்திராலோசனை நடத்தினர். இப்படியாகக் கட்சித்தலைவர்கள் 'குசுகுசு' பேச்சுக்கள் நடத்திவரும் அதேவேளை, கட்சிக்கூட்டங்களும் அவசரம் அவசரமாக நடைபெற்று வருகின்றன.

### இடைத்தேர்தலே வேண்டும்

காபந்து பிரதமர் திரு, சரண்சிங் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்ற 'ஜனதா-எஸ்' கூட்டத்தில்; இடைத்தேர்தல் நடைபெறவேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது இக்கூட்டத்தில் கலந்துகொண்ட திரு ராஜ்நாராயண் கருத்துத் தெரிவிக்கையில், திரு. சரண்சிங்கிவிடுத்த இடைத்தேர்தல் கோரிக்கைக்கு ராஷ்டிரபதி கட்டுப்பட்டிருக்கிறார் என்றும்; லோகசபையைக் கலைத்து இடைத்தேர்தலை நடத்த ராஷ்டிரபதி உத்தரவிடவேண்டும் என்றும் கூறினார்.

திருமதி இந்திராகாந்தி இல்லத்தில் நேற்று நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில், இடைத்தேர்தல் பற்றி நீண்டநேரம் விவாதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆனால் கட்சிமேற்கொண்ட முடிவுபற்றி எதுவும் உடனடியாக அறிவிக்கப்படவில்லை. இதே நேரத்தில் காங்கிரஸ் பாராளுமன்றக்குழுக்கூட்டமும் நேற்று நடைபெற்றது இக்கூட்டத்தில் திரு.ஜெகஜீவன்ராம், திரு. சந்திரசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### 'ராமு'க்கு பலத்த ஆதரவு

ஜனதா எம்.பி.க்கள் உட்பட நூற்றிரெண்டு எம். பி. க்கள் நேற்று ராஷ்டிரபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில்; திரு. ஜெகஜீவன்ராமுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர் "அரசாங்கம் அமைக்கத் தம்மால் முடியும் என்று திரு ஜெகஜீவன்ராம் உங்களிடம் கூறியுள்ளார். இதனை ஏற்று அவரது உரிமைக்கு மதிப்பளிப்பதே சிறப்பானது. அரசாங்கம் அமைக்க திரு. ஜெகஜீவன்ராமுக்கு தாங்கள் அனுமதி அளிக்காதபட்சத்தில், ஹரிஜனர்களையே புறக்கணித்துவிட்ட பழிக்கு நீங்கள் ஆளாகலாம்" என்று இந்த எம். பி.க்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர். இதேபோல உதிரிக்கட்சிகளைச்சேர்ந்த வேறுசில எம். பி.க்களும், சமூகநல ஸ்தாபனங்களும் ராஷ்டிரபதிக்கு அனுப்பிவைத்துள்ள தந்திகளில் திரு. ஜெகஜீவன்ராமுக்கு ஒருசந்தர்ப்பம் அளிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர்.

இச்சூழ்நிலையில், ராஷ்டிரபதி தமது இறுதியான முடிவை அநேகமாக இன்று வெளியிடலாமென்று நம்பப்படுகிறது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Telegeram Eelanadu, T.Phone 389,